# கரந்தெனிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கரன்தெனிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

------------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,726,355 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் நன்கொடைகள் என்பவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 58,120 இற்கான பொருட் பதிவேட்டுப் பொருட்கள் மூலதனப்படுத்தியிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 58,120 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,351,211 தொகை எனினும் அவை ரூபா 1,400,875 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் வருடத்திற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 49,664 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,758,861 இற்காக ஓய்வூதிய பங்களிப்பு தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வங்கியில் இருந்து பெற்றிருந்த ரூபா 8,000,000 இற்கான கடன் தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருப்பி செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,899,106 இற்கான கடன் மீதி நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(எ) சபையினால் பயன்படுத்தப்பட்ட 07 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த காணிகளுக்கான காணி உறுதிகள் அல்லது சாட்டுதல் கட்டளைகள் சபையில் காணப்படவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

11 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 738,195 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 132,800,029 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கை, பட்டோலைகள் மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ள மின் உபகரண பதிவேடு ஆகிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,377,946 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,079,312 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 வீதவரி மற்றும் ஏக்கல்வரி மற்றும் சந்தை வாடகை

----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,858,897 இற்கான வீதவரி, ரூபா 63,969 இற்கான ஏக்கர் வரி மற்றும் ரூபா 797,145 இற்கான சந்தை வாடகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம்

---------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 123,350 இற்கான வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,612,292 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 11,218,720 இற்கான முத்திரை கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 மஹ ஏதன்ட வர்த்தகதொடர் கட்டடத்தின் கடைகள் வாடகைக்கு கொடுத்தல்

---------------------------------------------------------------------------------------------------------------------------

மஹ ஏதன்ட வர்த்தக தொடர் கட்டடத்தின் மேல் மாடியில் 12 கடைகளும் தரை மாடியில் 12 கடைகளும் தொடர்பாக 2014 ஜனவரி 23 திகதி மேற் கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாடகை ஒப்பந்தத்தின் 01 ஆவது நிபந்தனையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கான வாடகை 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் எனினும் 2013 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு கடைகளுக்கான கடை வாடகை ரூபா 67,152 நிலுவையாக காணப்பட்டது. இந்த நிபந்தனைகளின் பிரகாரம் கொடுப்பனவு தாமதமாகும் ஒவ்வொரு நாட்களுக்காகவும் மாதாந்த வாடகையின் 1% மிகைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனினும் சபையினால் அந்த மிகைக் கட்டணத்தை பதிவேடுகளில் பதிவு செய்திருக்கவில்லை அல்லது அறவீடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் நிபந்தனை 04 இன் பிரகாரம் வாடகைக்கு பெற்றிருந்த ஆதனங்களை இடை வாடகைக்கு வழங்கப்பட முடியாது எனினும் 07 கடைகள் இடை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனை 08 இன் பிரகாரம் வாடகையாளர் வாடகைக்கு பெற்றிருந்த கடைகள் தவிர அவற்றிற்கு வெளியே வியாபாரப் பொருட்கள் வைக்கக் கூடாது எனினும் கீழ் மாடியில் 1 ஆம் இலக்க கடையில் வாடகையாளர் படிகளுக்கு கீழ் திறந்த நிலையில் காணப்படும் பகுதியில் இரும்பு கேட் ஒன்றினால் மூடி, குறிப்பிட்ட இடத்திலும்

வர்த்தக தொடர் கட்டடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசல கூடத்திலும் வியாபார பொருட்கள் இருப்பினை களஞ்சியப்படுத்தியிருந்தது.

2.2.5 வாராந்த சந்தை வாடகை

-----------------------------------------

ஊரகஸ்மன் சந்தி வாராந்த சந்தையின் வருமானத்தை சேகரித்தல் பற்றி 2013 திசெம்பர் 13 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சந்தை வாடகை பற்றுச் சீட்டுப் புத்தகங்களில் தலைமை அலுவலகத்தின் அல்லது உப அலுவலகத்தின் முத்திரை பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) வாராந்த சந்தையில் இலக்கங்கள் போடப்பட்டிருந்து 322 கடையினர் கூடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் வியாபாரத்தில் ஈடுபடும் கடையினர் கூடங்களின் எண்ணிக்கை 150 ஆகும் என அவதானிக்கப்பட்டன.

(iii) கடையினர் கூடங்கள் வியாபார நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் அவற்றின் முற்பகுதியில் கூடாரங்கள் அடித்து வியாபாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடைகள் பண்டங்களை சேகரிப்பதற்கு மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்தல் போன்ற ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iv) தென் மாகாண பொருளாதார மேம்படுத்தல் செயற்திட்டத்தினால் சந்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 26 கடைகளில் வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றிருந்த போதும் அவற்றில் இருந்து வாடகை அறவிட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

சேகரிக்கப்பட்டிருந்த வரியினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2002 இன் 14 இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் பிரிவு 66/67 இன் பிரகாரம் சபையினால் 2005 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 12,066,058 பெறுமதி கூட்டிய வரி 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்த ரூபா 394,855 இற்கான முத்திரை வரி மற்றும் குறிப்பிட்ட கட்டணமான ரூபா 16,940 என்பன ஆக மொத்தம் 12,477,253 இற்கான வரி 2014 நவம்பர் மாதம் வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

(அ) 2013 ஆகஸ்ட் மாதத்தில் களியாட்ட சுற்றுலா ஒன்று மேற்கொள்வதற்காக கரந்தெனிய பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு சபை நிதியத்தில் இருந்த ரூபா 200,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இன் மூலம் சட்ட ஏற்பாடுகள் வழங்கியிருக்காத விடயமொன்றிற்காக இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/ஆ/05/6/ பொது மற்றும் 2009 ஏப்ரல் 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தலைவர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட கையடக்க தொலைபேசி கட்டணங்களில் மாதாந்தம் ரூபா 2000 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடுவதற்கான உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு அங்கீகரித்த போதும் அவ் ஏற்பாடுகளும் மாற்றமாக 2011 ஏப்ரல் 07 திகதி நடைபெற்ற மாதாந்த சபை கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 4,000 வீதம் 2012 ஜனவரி மாதம் முதல் 2012 செப்டம்பர் மாதம் வரை கையடக்க தொலைபேசி படி என ரூபா 36,000 செலுத்தியிருந்தது.

4 கணக்கு விடயத்தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 19 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 31,859,181 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்